**17.10.2022**

**அ.வ.எண். 87/2016**

**வா.சா.1 கமலா அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கோரி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என்னை அவதூறாக பேசியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கபிலன் மற்றும் மனோகரன் ஆகியோர்களுக்கு எதிராக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் ஒரு மனையை தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

அந்த மனையை ருக்மணி அம்மாள் என்பவரின் முகவர் பங்காருசாமி அவர்களிடமிருந்து நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி மனைப்பிரிவில் ஒரு மனையை 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மனையை கிரையம் வாங்கிய பிறகு நான் அதில் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய மனையின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. அதன் விஸ்தீரணம் எனக்கு ஞாபகம் இல்லை.

அந்த சொத்தின் ஜக்குபந்தி மற்றும் அளவுகள் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1ல் நான் கிரையம் வாங்கிய மனை ஜக்குபந்தி மற்றும் அளவுகள்

குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராதுவில் தாவா சொத்தின் ஜக்குபந்தி மற்றும் அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதற்காக 2ம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் 2ம் பிரதிவாதி தான் மனையை வாங்கும்படி முன்னின்று எனக்கு சொன்னதால் நான் மனையை வாங்கினேன்.

பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக எனது பிராதுவில் சொல்லியதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. புகார் கொடுத்ததாக என் பிராதுவில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனவே 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எவ்வித பரிகாரமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையை பற்றி எனக்கு தெரியாது. அந்த பதிலுரையின் நகலை எனது வழக்கறிஞர் கொடுத்த பின்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்தார் என்று இதுநாள் வரை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் பிரச்சனை செய்யவில்லை என்றும் நாங்கள் தான் அவர்கள் மனையின் ஒரு பகுதியை

ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளோம் என்றும் 1ம் பிரதிவாதி தனது பதிலுரையில் கூறியுள்ளார் என்றால் அவர்கள் எனது வீட்டில் வந்து மேற்படி விவரங்களை சொன்னபோது தான் தெரியும். மற்றபடி அவர்கள் தாக்கல் செய்த பதிலுரை பற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதிகள் எங்கள் வீட்டில் வந்து பிரச்சனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் என்னிடம் வந்து கேட்டார்கள். பிரதிவாதிகள் எனது வீட்டிற்குள் அத்துமீறி நுழையவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது வீட்டில் வந்து பிரச்சனை செய்தார்கள் என்று எனது பிராதுவில் நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனவே இந்த வழக்கில் வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல.

எவ்வித காரணமும் இல்லாமல் பிரதிவாதிகளை அலைகழிக்கவேண்டுமென்று நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த பங்காருசாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தால் தான் இந்த வழக்கின் உண்மை தன்மை தெரியும் என்றாலும் பங்காருசாமியை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

எந்தவித உண்மையும் இல்லாமல் கட்டுக்கதையாக இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளேன் என்றாலும் எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இருந்திருந்தால் அதற்கு பட்டா வாங்கியிருப்பேன் என்றாலும் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லாததால் தான் பட்டா பெறவில்லை என்றாலும் சரியல்ல.

இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் எனது கணவர் சொல்லி தான் இந்த வழக்கு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனவே இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.